# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.86/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 28.01.2025 |
| பெயர் | : | ராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 28th day of January 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் வாசுதேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி பால்பாண்டி என்பவரைத் தெரியும். ஆஜர் எதிரி என் அண்ணன் பெரியப்பா மகன். கடந்த 21.10.2017 அன்று மதியம் 3.30 மணிக்கு தங்கப்பழம் பாலிடெக்கினிக் கல்லூரி மேல்புறம் உள்ள காட்டிற்குள் நானும் பால்பாண்டியும் நின்று கொண்டிருந்தபோது போலீசார் வந்தார்கள். அங்கு வந்து மாரிச்சாமியை விசாரித்தார்கள். ஆய்வாளருடன் வந்திருந்த காவலர் ஒருவர் அதை எழுதினார். மாரிச்சாமி சொல்லச் சொல்ல எழுதினார்கள். அதில் நானும், பால்பாண்டியும் கையெழுத்துப் போட்டோம். மாரியம்மன் கோவில் அருகில் உள்ள ஓடைப்பக்கம்

அரிவாளை வைத்திருப்பதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகும். 4.15 அல்லது 4.30 மணிக்கு வாசுதேவநல்லூரில் உள்ள மாரியம்மன் கோவில் பக்கத்தில் உள்ள ஓடைக்குள் உள்ள முட்புதரிலிருந்து மாரிச்சாமி அரிவாளை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். அதை போலீசார் வாங்கிக்கொண்டார்கள். அங்கு வைத்து ஒரு வாக்குமூலம் எழுதப்பட்டது அதிலும் நானும், பால் பாண்டியும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகும். அன்று புதரில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய அரிவாளை என்னால் அடையாளம் காட்ட முடியும். அதுதான் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரியை பிடித்து வைத்து போலீசார் விசாரித்தார்கள். அவரை பிடிக்கும் முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எதிரியை எங்கு வைத்து பிடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் எதிரி கூறினார் கூடுதல் விவரங்களை எதிரி கூறவில்லை என்றால் சரிதான். எதிரி எடுத்துக்கொடுத்ததாக கூறப்படும் இடத்தை குறிப்பிட்டு அடையாளம் காண அங்கு அடையாள குறிகள் ஏதும் இல்லை. போலீசார் அதே இடத்திலிருந்து கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தையும் அத்தாட்சியையும் நான் படித்துப் பார்க்கவில்லை. அ.சா.ஆ.3 ல் "முயற்சி" என்ற வாசகம் இடைச்செறுகலாக உள்ளது

என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரியை ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறும் இடத்தில் இருந்ததில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் பேரில் இன்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.28 16:15:46 +0530